மதுரை, நிலநீர் வட்ட கண்காணிப்புப்பொறியாளர், பொபது., அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: பொறி.அ.கிறிஸ்து நேச குமார், எம்.டெக்.,
தண்காணிப்புப்பொறியாளர், பொபது., (கூ/பொ)

செயல்முறை ஆணை எண். இ2/41/2020/நாள்.04.05.2021

ஆணை:

பொருள் : பணியமைப்பு - பொபது - தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி - காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.சு.கண்ணன், அலுவலக உதவியாளர் - மகன் திரு.க.பாலசுப்பிரமணியன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கியது - பணிவரன்முறை செய்து ஆணை விளம்புதல் - சார்பு.

பார்வை :
1. முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். S3(4)/ 44534/ 2014/ நாள்.09.11.2018
2. தலைமைப்பொறியாளர், பொபது., மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விபரக்குறிப்பு மையம், தரமணி அவர்களின் செயல்முறை ஆணை எண். இ2(4)/8226/2018/ நாள். 26.11.2018.
3. இவ்வட்ட அலுவலக செயல்முறை ஆணை எண்.இ1/211/2018 (1996)/நாள். 10.12.2018
4. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் (எம்) சீர்திருத்தத்துறை நாள்.01.08.2018
5. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை (க்யூ1) துறை நாள்.23.01.2020
6. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்.26.02.2021
7. தமிழ்நாடு அரசு பொதுப்பணி (பி1) துறை/கடித எண்.10498/பி1/ 2020-4/நாள். 30.03.2021

❖❖❖

பார்வை 1இல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.சு.கண்ணன், அலுவலக உதவியாளர் என்பவரின் மகன் திரு.க.பாலசுப்பிரமணியன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்ய தெரிவு செய்யப்பட்டு பார்வை 2 மற்றும் பார்வை 3இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி உரிய மறுபணியமர்வாணை வழங்கியும் 12.12.2018 மு.ப. முதல் இவ்வட்ட கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிலநீர் கோட்டம், காரைக்குடி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 4இல் காணும் அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வை 5இல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குவது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பார்வை 7இல் காணும் அரசு கடிதத்தில் பணிவரன்முறை செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டபடியும் மேலும், திரு.க.பாலசுப்பிரமணியன், இளநிலை உதவியாளர் தேவையான கல்வித்தகுதி, வயது தகுதி மற்றும் உடல்தகுதி ஆகியவற்றினை பெற்றிருப்பதாலும், பார்வை 6இல் காணும் அரசாணையின் பத்திகள் (5.1) மற்றும் (5.2) இல் தெரிவித்துள்ளபடி கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட சம்பந்தப்பட்ட நியமன அலுவலரின் ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலரே உரிய செயல்முறை ஆணையினை பிறப்பிக்கலாம் என தெரிவித்ததைத் தொடர்ந்து இளநிலை உதவியாளர் பதவியில் தனியரின் பணி 12.12.2018 மு.ப. முதல் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவத்தை துவக்கி வைத்தும் ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணித்தொகுதி விதி 23(a)ன்படி பணிவரன்முறை செய்த நாளான 12.12.2018 மு.ப. முதல் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்கப்படுகிறது. 12.12.2018 மு.ப. முதல் தனியர் தனது மூன்றாண்டு தொடர் பணிகாலத்திற்கு உட்பட்ட இரண்டாண்டு பணிகாலத்தில் இவரது தகுதிகாண்பருவம் நிறைவடையும்.

(ஒம்) அ.கிறிஸ்து நேச குமார்,
கண்காணிப்புப்பொறியாளர், பொபது., (கூ/பொ)
நிலநீர் வட்டம், மதுரை.

பெறுநர்

1. திரு.க.பாலசுப்பிரமணியன்,
   இளநிலை உதவியாளர்,
   நிலநீர் கோட்டம், காரைக்குடி.
   (வழி செயற்பொறியாளர், நிலநீர் கோட்டம், காரைக்குடி)

நகல் : முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல்: தலைமைப்பொறியாளர், பொபது., மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விபரக்குறிப்பு மையம், தரமணி அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் : செயற்பொறியாளர், நிலநீர் கோட்டம், காரைக்குடி அவர்களுக்கு தகவலுக்காகவும், தக்க மேல்நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

ஆட்சி அலுவலர், பொபது.,
கண்காணிப்புப்பொறியாளருக்காக
நிலநீர் வட்டம், மதுரை.

அம்மையீர்,

தனியரின் பணிப்பதிவேடு பக்க எண். 8 தொகுதி II ல் பதிவு செய்யப்பட்டது.

செ.பொ